ஒருங்கிணைந்து மகிழும் வெளிநாட்டு ஊழியர்கள்

தேசிய தொழிற்சங்கக் காங்கிரசின் கற்றல் மையம் அமைப்பும் வெளிநாட்டு ஊழியர் மையம் அமைப்பும் சேர்ந்து வெளிநாட்டு ஊழியர்களுக்காக 'சிங்கப்பூரை அறியும் செயல்திட்டம்' என்ற ஒரு திட்டத்தை நேற்றுத் தொடங்கின.

வெளிநாட்டு ஊழியர்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டது இந்தத் திட்டம்.

120 வெளிநாட்டு ஊழியர்களுக்கு நேற்று சீனக் கலாசார இலையுதிர்க் காலச் சந்திரப் பணியாரம் கொடுக்கப்பட்டது. காகித சீனக் கலாசார கூண்டு விளக்குகளையும் அவர்கள் பெற்றனர்.

இதன் வழி இதர கலாசாரங்களின் அருமை பெருமைகளை ஊழியர்கள் தெரிந்துகொண்டனர்.

தங்களுக்குக் கிடைத்த சீனக் கலாசார கூண்டு விளக்குகளுடன் ஊழியர்கள் இப்படி பெரு மகிழ்ச்சியில் திளைத்தனர்.

ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்